உ

சிவமயம்

# வாதரவத்தையூர் அருள்மிகு வைஷ்ணவி அம்பிகையின் திருவூஞ்சல்

## (பஜனைப் பாடல்களுடன்)



சித்த கமலச் செந்தாமரை ...



சஷ்டியை நோக்க ...





வெள்ளைத்தாமரைக்கன்றி ...



கற்பூரநாயகியே ...



நயினைப்பதியிலே கோவில் ...



ஆத்தாளை எங்கள் ...

ஆக்கியோன்

**கவிமணி க. ஆனந்தராசா**

(அன்னைதாஸன்)

ஓய்வு பெற்ற அதிபர்

கற்பகக்கனி ஆன்மீக வெளியீடு 27

உ

சிவமயம்

வாதரவத்தையூர்

# அருள்மிகு வைஷ்ணவி அம்பிகையின்

# திருவூஞ்சல்

(பஜனைப் பாடல்களுடன்)



ஆக்கியோன்

**கவிமணி க.ஆனந்தராசா**

**(அன்னைதாஸன்)**

சக்தி உபாசகர்

ஓய்வுபெற்ற அதிபர்

ஊரெழு

28.01.2017

உ
ஓம் சக்தி



# முகவுரை

ஈழவழ நாட்டிலே அன்னைக்கு ஆலயங்கள் பல உள, ஆனால் இவ் வாதரவத்தையில் தனித்துவமான பழக்க வழக்கங்களைக் கொண்ட பூர்வீகக் குடிகள் வாழுகின்றார்கள். இவர்கள் அனைவரும் சைவவேளாண் குலதிலகர்கள், ஏன் இவர்கள் குறிப்பிட்ட ஆண்டுகளிற்கு முன் வேறு ஊர்களிலேயே திருமணஞ்செய்யா இயல்பினர். தற்பொழுது காலமாறுகைக்கேற்ப பரந்து விரிந்துளர் இத்தகைய இயல்பு கொண்ட இத்திருவூரார் சுப்பர் எனும் பெரியாரால் ஆதரித்த சூலத்தாய், இப்போ சப்தகன்னியர்களாகி வைஷ்ணவியை மூலவளாக்கி ஓர் பெரு ஆலயமாக உள்ளது. இவள் குடமுழுக்கும் கண்டு அந்தண சிவாச்சாரியாரின் அழகு மிகு பூசையில் அருள் புரிந்து வருகிறாள். இவளிற்கு இவள் தம் அடியாளாகிய கிருஷ்ணமூர்த்தி சிவயோகத்திற்கு தாயின் அருள் தூண்ட முகிழ்ந்து மலர்வதே இத்திருவூஞ்சற் பாக்கள்

அடியோனைப் பாடவைத்த பேரருட்தாய்
இப்போதன் வடிவங்களில் ஒன்றான
வைஷ்ணவிக்கும் திருவூஞ்சல் பாடவைத்துள்ளாள்

அத்தோடு அன்னையின் பஜனைப்பாடல்களுடன்
பல முத்துக்களும் சேர்ந்துள்ளன.
பாடிப்பரவுவோம்.

"அன்னை அருள் அகிலத்தைக் காக்க"

**அன்புடன் கவிமணி அன்னைதாஸன்**

# வாதரவத்தை அருள்மிகு ஸ்ரீவைஷ்ணவி ஆலய திருவூஞ்சற் பாக்கள்

## காப்பு

தங்கத்தமிழ் மன்னன் சங்கிலியன்
மாங்காப் புகழ் பேசும் மண்ணாம் யாழின்
அங்கமென அணிசேர்க்கும் அரிய ஊராம்
வாதரவத்தை யெனும் திருவூர் மேவும்
எங்கள் அன்னை அம்பிகையின் வடிவு தாங்கும்
சங்கைமிகு சப்த கன்னியர்களிலொன்றாம்
பொங்கு புகழ் வைஷ்ணவிக்கு ஊஞ்சல் பாட
துங்கக் கரிமுகவன் கழலே காப்பாம்.

## நூல்

01. தென்னவனின் நால்வேதம் தூண்களாக
தொன்மை மிகு ஆகமங்கள் விட்டமாக
நன்மைமிகு கலைகளெல்லாம் விதானமாக
நவமணியும் முத்தும் பரிவட்டமாக
வன்னி வண்ண மாலைகளோ கயிறதாக
அன்புமிகு அடியார் மனப் பீடமேறி
தன்னிகரில் வாதரவத்தை மேவும்
தாயே எம் வைஷ்ணவியே ஆடீரூஞ்சல்

02. மூத்த எம் சந்ததியின் முத்தான தொண்டர்
சுப்பரெனும் பெருமகனார் ஆலின் கீழே
பத்தி செய்து திரிசூலந் தன்னை வைத்து
பரவிநின்ற பயனாலே வந்த தாயே
எத்திக்கும் எம் மக்கள் சென்ற போதும்
உத்தமியே உனைத்தொழுத பின்னே செல்ல
சித்திரவாதரவத்தையூரில்
வந்த மர்ந்த வைஷ்ணவியே ஆடீரூஞ்சல்

03. சூலமாக ஆலமர நீழலி லமர்ந்தாய்
ஓலையாலே கொட்டிலினை அமைக்கவைத்தாய்
தூலசக்தியாக எம்மைக் காக்க வேண்டி
ஏழுசக்தியாக எம்முன் அமர்ந்த தாயே
ஞாலமெலாம் பரந்து வாழும் எம்மூர் மக்கள்
காவலாக உன் நூலைக் கையில் கட்டி
ஆவலுடன் உனைத் தொழ அவர்க்கு அருளும்
அன்னை எம் வைஷ்ணவியே ஆடீரூஞ்சல்

04. சக்கரத்தைக் கொண்ட வளைக்கரமுமாட
சங்குதனைத் தாங்கிய மறுகரமுமாட
உக்கிர கதாயுத கரமுமாட
அபய வரத முத்திரைக் கங்களாட
செந்தாமரை கொண்டாறு கரங்களாட
அந்தரத்தில் கருடன் மீதமர்ந்தே யாட
செந்நெல்விளை வாதரவத்தை மேவும்
சுந்தரியே வைஷ்ணவியே யாடீரூஞ்சல்

05. ஞானத்தை நமக்களிக்கும் பிரம்மியோடு
நல்லறிவு நல்கும் தாய் மகேஸ்வரியும்சேர
சந்ததியைத் தரும் தாயாம் கௌரி சூழ
தக்க வரம் தானளிக்கும் வராகியோடும்
ஒப்பரிய தங்கமருள் வைஷ்ணவியாள்
தப்பாத போக மருள் இந்தி ராணி
இப்புவிக்கு வெற்றி தரும் சாமுண்டியோடு
சுப்பர்தந்த வைஷ்ணவியே ஆடீருஞ்சல்

06. சீலமிகு ஆவணிப் பூரந்தன்னை
சிறப்போடு ஆரம்பமாகக் கொண்டு
காலமது பத்துத் தினங்கள் எமக்கு
கருதரிய திருவிழாக் களாகப் போற்ற
ஏலுமவர் துயர் துடைத்து இன்பம் நல்கி
எல்லோர்க்கும் அருள்புரியும் எங்கள் தாயே
ஞாலம் புகழ் வாதர வத்தையூரின்
ஞானத்தாய் வைஷ்ணவியே யாடீருஞ்சல்

07.தீராத பிணிகளெல்லாந் தீர்ப்பதற்கே
திருவால நீழலிலே யமர்ந்த தாயே
ஆரா அமுதனைய அன்புத் தாயே
அழகு மன ஊஞ்சலிலே யாடுந்தாயே
சீராரும் மஞ்சளொடு மாங்கல்யம்
மங்கையர்க் கருளுகின்ற மாண்புத் தாயே
பேராழும் வாதரவத்தை யூரில்
வந்துதித்த வைஷ்ணவியே யாடீருஞ்சல்

08. பத்தியுடன் பால் பழம்நெய் அபிடேகித்து
பரவுகின்ற அடியார்கள் அனைவருக்கும்
அத்தனையும் அருளி அவர் துயர்துடைக்க
அன்று எங்கள் சுப்பருன்னைத் தந்தாரம்மா
சித்தமதில் அவர் பணியைச் சிறப்பாயேற்று
சிறப்புடனே பணிகின்றோம் வா நீ அம்மா
வித்தகர் வாழ் வாதரவத்தையூரின்
உத்தமியே வைஷ்ணவியே யாடீரூஞ்சல்

09. நெற்றியிலே திருநீற்றின் ஒளி இலங்க
நீண்ட பெருங்கருங்கூந்தல் அழகுசேர்க்க
சிற்றிடையில் சிறந்த மணி முத்துங் கொண்ட
சிறப்புறு நல்லொட்டியாணஞ் சேர்ந்திலங்க
பற்றிய வெம்பாவமெல்லாம் பறந்தே யோட
பைங்கிளியாள் பக்தர்களைப் பாதுகாக்கும்
வற்றாப்புகழ் வாதரவத்தையூரின்
வடிவழகே வைஷ்ணவியே யாடீரூஞ்சல்

10. அரக்கர் குழாம் ஆர்ப்பரித்து அழித்தவேளை
இரக்கமுற்று எமைக்காக்க வடிவெடுத்து
இரண்யன் இரத்த பீஷன் மகிடனோடு
சக்திமிகு சண்முண்ட அரக்கர்சேனை
உரக்க ஓலமிட்டு அலறி ஓட
ஒழித்தவளே உலகாளும் எங்கள் தாயே
சுரக்குமருள் வாதரவத்தையூரின்
சுந்தரியே வைஷ்ணவியே யாடீரூஞ்சல்

## எச்சரீக்கை

கீதமொடு கிங்கிணி உகந்தாய் எச்சரீக்கை
வாதமொடு பித்தம் அழிப்பாய் எச்சரீக்கை
பாதகங்கள் நீக்கும் பராபரையே எச்சரீக்கை
வாதரவத்தையூர் வடிவே எச்சரீக்கை
நால்வேதப்பொருளே நாயகியே எச்சரீக்கை
பால் சுரந்து பாலகரைக் காப்பாய் எச்சரீக்கை
நூல் தந்து நோய்நொடி தீர்ப்பாய் எச்சரீக்கை
கால் தொழுவோர் கவலை யெலாம் தீர்ப்பாய்
எச்சரீக்கை

## லாலி

முப்பொருளே மூலவளே லாலி சுபலாலி
எப்பொழுதும் எமைக்காப்பாய் லாலி சுபலாலி
தப்பாமல் அருள்தருவாய் லாலி சுபலாலி
சுப்பர் தந்த வைஷ்ணவியே லாலி சுபலாலி
நோயகற்ற வந்தமர்ந்தாய் லாலி சுபலாலி
சேய்களெமைக் காப்பாயே லாலி சுபலாலி
ஆயகலைநாயகிக்கு லாலி சுபலாலி
ஆனந்த வைஷ்ணவிக்கு லாலி சுபலாலி

## பராக்கு

அருள்புரியும் அம்பிகையே ஆதிபராக்கு
பொருளோடு புகழ்வளர்க்கும் சோதி பராக்கு
இருளகற்றும் இலக்குமியின் வடிவே பராக்கு
மருளகற்றும் மாதே வைஷ்ணவியே பராக்கு
ஆவணிப்பூரத்தை உகந்தாய் பராக்கு
பாவாணர் போற்றும் பராபரையே பராக்கு
தேவாமிர்தமே தேனே பராக்கு
நாவார பாடவரம் தருவாய் பராக்கு

## வாழி

வற்றாத பால் சுரக்கும் ஆநிரைகள் வாழி
வளமான வாழ்வளிக்கும் அரசு வாழி
கற்றோங்கும் கலைகளொடு கவிஞர் வாழி
காசினியிற் பயிர் செல்வம் செழித்து வாழி
பெற்றோரும் பிள்ளைகளும் பிறவும் வாழி
பொற்புறு வேதமுடன் ஆகமங்கள் வாழி
நற்றமிழர் வாதரவத்தை யூரின்
சிற்றிடையாள் வைஷ்ணவியின் கழல்கள் வாழி

## மங்களம்

வேழமுகன் வேதசிவன் பார்வதிக்கு மங்களம்
வேண்டவழி காட்டும் ஆறுகன்னியர்க்கு மங்களம்
வேணுகான லோலனுக்கும் வீணாகான நாயகிக்கும்
வேலனுக்கும் வள்ளி தெய்வயானைக்கும் மங்களம்
சூலப்படை கொண்ட ஞானவைரவர்க்கு மங்களம்
சூழ்வினைகள் வேரறுக்கும் வைஷ்ணவிக்கு மங்களம்
அட்டதிக்குப் பாலகர்க் கனந்த கோடி மங்களம்
துட்டவினை சேர்ந்திடாமற் சொல்லுகின்றோம் மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம்
மங்களம் ! மங்களம்!! மங்களம் !!!
அரஹர நமப்பார் பதிபதயே
அரஹர மகா தேவா.

கவி ஆக்கம்
கவிமணி, சக்தி உபாசகர்
க.ஆனந்தராசா அன்னைதாஸன்

வாதர வத்தையூரை வாழவைக்கவே
வந்துதித்த தெய்வமே எங்கள் வைஷ்ணவி
ஆதரவற்றார்க்கும் எங்கள் வைஷ்ணவி
ஆறுதலைத் தான் தருவாள் எங்கள் வைஷ்ணவி
ஏழை எங்கள் பாடல் கேட்டு எங்கள் வைஷ்ணவி
வேளை அறிந்து வந்திடுவாள் எங்கள் வைஷ்ணவி
ஓலைக் குடிசையிலே சுப்பர் தந்தவள்
ஆலயமாய் மாற்றிவிட்டாள் எங்கள் வைஷ்ணவி
பக்தியோடு கூடிடுவோம் ஓடி வாருங்கள்
பஜனை பாடி தினம் தொழுவோம் தேடி வாருங்கள்
எத்தகைய துன்பம் எம்மைச் சூழ்ந்த போதிலும்
அத்தனையும் அழித்து என்றும் எம்மைக் காப்பவள்
மாயவனின் மாயசக்தி யாக நிற்பவள்
தூயவளின் பாதங்களைத் தினமும் போற்றுவோம்
தாயிவளை அழுது தினம் தொழுது வேண்டினால்
போயகலும் வினைகளெல்லாம் புரிந்து கொள்ளுங்கள்
ஓம் சக்தி ஓம் சக்தி என்று சொல்லுங்கள் வினை
ஓடும் ஓடும் ஓடும் இதை நம்பி ஓதுங்கள்
நாளுங்கோளும் எங்கள் வாழ்வில் பகைத்த போதிலும்
அவை மாண்டு நாங்கள் மீண்டு வாழ ஓதி நில்லுங்கள்

## அம்மா அம்மா என் தாயே

அம்மா அம்மா என் தாயே ஆறுதல் தந்தெம்மைக்
காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே எங்கள் துர்க்கை தாய்தானே
(அம்மா அம்மா..)
இங்கே நாம்படும் வேதனைகள் எல்லாம் உனக்குத்
தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும் ஏனோ எம்மை
வாட்டுகின்றாய் (அம்மா அம்மா..)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா தாயே எம்மைக்
காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே புதுமை ஒன்றைச்
செய்திடம்மா (அம்மா அம்மா..)

அல்லும் பகலும் அழுகுரல்கள் எல்லாத் திசையும்
வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை புழுவாய்த் துடிக்க
வைக்குதம்மா (அம்மா அம்மா..)

சொல்லால் வடிக்க முடியாத துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது தாயே எம்மைக் காப்பாற்று
(அம்மா அம்மா..)
ஒன் றா இரண்டா நாம் சொல்ல உள்ளத்து வேதனை
தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும் ஏனோ எம்மை
வாட்டுகின்றாய் (அம்மா அம்மா..)
நின்றால் நடந்தால் உன் நினைவு எங்கும் எதிலும் உன்
காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு துணையாய் என்றும்
வந்திடம்மா (அம்மா அம்மா..)



## தாவி வந்து தாங்கிடம்மா நாகபூஷணி

நயினையிலே கோவில் கொண்டாள் நாகபூஷணி
பஜனை பாடவைத்தவளெம் நாகபூஷணி
அயன் எழுத்தை மாற்றிடுவாள் நாகபூஷணி
பயம் எமக்கு ஏன் அவளின் பாதமேகதி

இந்துக் கடல் மீதினிலே கோவில் கொண்டவள்
எந்தமதம் சார்ந்தவர்க்கும் தாயைப் போன்றவள்
கந்தனுடன் கணபதியைச் சேர்த்துக் கொண்டவள்
எந்தவினை வந்திடினும் எம்மைக் காப்பவள்

இராவணனின் சாமகானம் தனை ரசிப்பவள்
நாரணனின் தங்கையிவள் நாகம் பூண்டவள்
பூரணி புராதனியிப் புவியை ஈன்றவள்
காரணியெம் கண்மணியின் கழல்கள் போற்றுவோம்

சேய்களிங்கு செந்தணலில் தெரிய வில்லையோ?
தாயைத் தேடித் தவிப்பதுவும் புரியவில்லையோ?
பாவிகளைப் பார்த்த பின்பும் பரிவு மில்லையோ?
தாவிவந்து தாங்கிடம்மா நாகபூஷணி



## தேரடிச்சித்தர்கள் போற்றிய வேல்

நல்லூரிலே நின்றாண்டிடும் வடிவேலனே முருகா
எல்லோரதும் வினை தீரவே விரைந்தோடிவா முருகா

சரவணப் பொய்கையில் உதித்தவனே
அரவணைத் தாண்டிடும் அற்புதனே
ஆரமுதே எங்கள் அழகனே வா
(2) (நல்லூரிலே)

வள்ளி மணாளனே வாருமையா
வருந்திடும் எங்களைப் பாருமையா
அள்ளி அருள்மழை தாருமையா
(2) (நல்லூரிலே)

கருணைக் கடலே கதிர் வேலா
அருண கிரியின் குரு நாதா
தருணம் இதுஉன் அருளைத் தா
(2) (நல்லூரிலே)

தேரடிச் சித்தர்கள் போற்றிய வேல்
தேவருந் தேடிடுந் திவ்ய வேல்
பேரிடர் களையிங்கு களைகின்ற வேல் – இது
(2) (நல்லூரிலே)

## அன்னையிடம் ஓடி வாருங்கள்

அன்னையிடம் ஓடி வாருங்கள்

அவள் ஆலயத்தில் ஒன்று கூடுங்கள்

உள்ளக்குறை சொல்லி அழுங்கள்

அவள் துள்ளி வந்து தீர்த்து அருள்வாள்

(அன்னையிடம்)

அழகான மலரெடுத்து மாலை தொடுங்கள்

அன்போடு சூட்டி நின்று அழகு பாருங்கள்

பக்தியுடன் ஒன்று சேர்ந்து பஜனை பாடுங்கள்

சக்தி ஓடி வந்து நின்று காட்சி தருவாள்

(அன்னையிடம்)

நாகபூஷணியிடத்தில் நயந்து பாடுங்கள்

தீபமேற்றி நெய்யினாலே தொழுது நில்லுங்கள்

யோக முள்ளவர் களுக்கு வாய்ப்பை நல்குவாள்

தாயை வேண்டி தரணியிலே தழைத்து வாழுங்கள்

(அன்னையிடம்)

அன்னை, அன்னை என்று சொல்லி அழுது நில்லுங்கள்
அனுதினமும் ஆடிப்பாடி அவளைப் போற்றுங்கள்
கன்றின் குரல் கேட்ட அந்த தாய்ப்பசுவைப் போல்
கதறிக் கொண்டு எங்கள் முன்னே ஓடிவருவாள்

(அன்னையிடம்)

எல்லோரும் எனது மக்கள் என்று கூறுவாள்
ஏற்றத்தாழ்வு எம்மிடையே காட்டிட மாட்டாள்
உற்ற பிணிகள் அனைத்தும் உணர்த்திக் காட்டுவாள்
குற்றங்களை நீக்கி எம்மைக் குணமுறச் செய்வாள்

(அன்னையிடம்)

துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதியாய் தோன்றி நிற்பவள்
எக்காலமும் எம்மை இங்கே காத்து அருள்பவள்
தப்பாமல் அவள் பாதங்களை அழுது வேண்டினால்
அப்பாலோடும் வினைகள் எல்லாம் அறிந்து கொள்ளுங்கள்

(அன்னையிடம்)



**கற்பூர நாயகியே**

கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளி மகமாயி! கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவ காமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி! விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே!
(கற்பூர)

புவன முழுதாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி
(கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே! எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ - அம்மா!
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத்தினம் வழி அனுப்பு!
(கற்பூர)

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்!
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்!
பண்ணமைக்கும் நா உனையே பாடவேண்டு!
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்!
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்!
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்!
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா!

(கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்!
நெஞ்சினிலும் திருநாமம் வழிய வேண்டும்!
கற்றதெல்லாம் மேன்மெலும் பெருக வேண்டும்!
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்!
சுற்றமெலாம் நீடுழி வாழ வேண்டும்!
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்!
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா!

(கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ!
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ!
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ!
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ!

(கற்பூர)

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்!
அறிவுக்கே என் காது கேட்க வேண்டும்!
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்!
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்க வேண்டும்!
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்!
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்!
என் பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்!
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்!
(கற்பூர)

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை!
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!
செம்பவள வாயழகி! உன்னெழிலோ!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவில்லை!
(கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்!
கயிறாகி உயிராகி உடலாகினாய்!
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்!
நிலமாகி பயிராகி உணவாகினாய்!
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்!
தொழுதாலும் அழுதாலும் வழிவாகினாய்!
போற்றாத நாளில்லை தாயே உன்னை!
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை!
(கற்பூர)

## துக்க நிவாரண அஷ்டகம்

1. மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்ட நல் கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

2. கானுறு மலரெனக் கதிரொளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவ ஒளி தாரொளி மதி ஒளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

3. சங்கரி சௌந்தரி சதுர் முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எம்குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்த நல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

4. தண தண தந்தண தவில் ஒலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிரொளி வீசிடக் கண்மணி நீ வருவாய்
பண பண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

5. பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக் கொடுத்த நல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நற் சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

6. எண்ணியபடி நீ அருளிட வருவாய் எம்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

07. இடர் தரு தொல்லை இனிமேல் இல்லையென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

08. ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

## சரஸ்வதி துதி

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடென்னை
சரியாசனம் வைத்த தாய்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போல்கையுந் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லுஞ் சொல்லாதோ கவி

# ஸ்ரீகுமரகுருபர அடிகளார் அருளிய

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக்கன்றி நின்பதந்தாங்கவென்வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ? சகமேழுமளித்து
உண்டான் உறங்க, ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகல கலாவல்லியே!

01

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர, நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய் பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே! கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே! சகல கலாவல்லியே!

02

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கொன்று கூடும் கொலோ? உளங் கொண்டு
தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே! சகல கலாவல்லியே!

03

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும், சொற்சுவை தோய்
வாக்கும், பெருகப் பணித்தருள்வாய், வடநூற்கடலும்,
தேக்கும், செழுந்தமிழ்ச் செல்வமும், தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே! சகல கலாவல்லியே!

04

பஞ்சப்பிதந்தரு செய்யபொற் பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத்தலராதது என்னே? நெடுந்தாட் கமலத்து
அஞ்சத் துவசமுயர்த்தோன் செந் நாவும், அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய், சகல கலாவல்லியே!

05

பண்ணும், பரதமும் கல்வியும், தீஞ்சொற்பனுவலும் யான்
எண்ணும், பொழுதெளிதெய்த நல்காய் எழுதா மறையும்,
விண்ணும், புவியும், புனலும், கனலும், வெங்காலும், அன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய், சகல கலாவல்லியே!

06

பாட்டும், பொருளும், பொருளாற் பொருந்தும் பயனுமென்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளம் கொண்டு
தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பாலமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே!

07

சொல்விற்பனமும், அவதானமும், கவி சொல்ல வல்ல
நல்வித்தையுந்தந்தடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கரிதென்று ஒரு காலமுஞ் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே! சகல கலாவல்லியே!

08

சொற்கும், பொருட்கும், உயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்? நிலம் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடரசன்னம் நாண, நடை
கற்கும் பாதாம்புயத் தாளே! சகல கலாவல்லியே! 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல் கோடி உண்டேனும் விளம்பில் உன்போற்
கண் கண்ட தெய்வமுளதோ? சகல கலாவல்லியே! 10

---



## எங்களுக்கமைதியைத் தாருமையா

வேல்முருகா வேல்முருகா வேல்முருகா எம் முன் வா முருகா
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா

ஆற்றங்கரை உறை ஆறுமுகா
போற்றுகிறேன் உன்னை வா முருகா
வாட்டும்எம் வினைகளை வீழ்த்திடவே
பாட்டிசை கேட்டுநீ வந்திடையா

நல்லையின் நாதனே வாருமையா
நாம்படும் வேதனை தீருமையா
தொல்லைகள் அனைத்தையும் தீர்த்திடவே
தோகை மயிலினில் வந்திடையா

மாவைப் பதியுறை வேலவனே
பூவைக்கு புதுமுகந் தந்தவனே
பாவை விரும்பிடும் பாலகனே
தேவைகள் தீர்த்திடும் தெய்வமே வா

கதிர் காமக் கந்தனே வாருமையா
எதிர் வந்தொருதரம் பாருமையா
ஏதிலிக ளாயிங்கு ஏங்கியழும்
எங்களுக் கமைதியை தாருமையா

## கச்சையோடு நின்றவன் பச்சைசாத்தி வருகிறான்

நல்லை நகர் வீதியிலே தங்கவேலன் வருகிறான்
நம்பித் தொழு மடியவரின் துயர்ந்தீர்க்க வருகிறான்
ஐந்து ஐந்து ஐந்து ஐந்து ஐந்து நாட்கள் திருவிழா
நைந்து நைந்து நைந்துருகும் அடியவர்க்குப் பெருவிழா

மயிலோ டன்னம்காரம் பசுமீதுவருகிறான்
ஒயிலாகப் பெண்களிரு வருமருகில் வருகிறார்
வேதகீத நாதமுடன் பாதந்தொழ வருகிறான்
வாதரோக தோஷமெல்லாம் போக்கிடவே வருகிறான்

பழனிமலை மீதினிலே கச்சையோடு நின்றவன்
பச்சை மஞ்சள் பவுண் ஜொலிக்க நல்லைவீதி வருகிறான்
ஆண்டுதோறும் தன்னழகுக் கழகுசேர்த்து வருகிறான்
வேண்டுவார்க்கு வேண்டும் வரந் தந்ததனைப் பெறுகிறான்

செல்லப்பனுக் காங்கேயொரு நல்லப்பனாய் நின்றவன்
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே வேலுருவில் வருகிறான்
அழுதழுது தொழுமடியார் அவலம் போக்க வருகிறான்
பொழுது போக்க வந்தவரும் தொழுது வணங்க வருகிறான்

# இவரைப்பற்றியது



இவர் பாட வேண்டும் என்று பாடுபவர்கள் வரிசையில் இடம் பெறுபவரன்று, ஆனால் பாடாமல் இருக்க முடியாது பாடுபவர். இவரது அம்மா அம்மா என் தாயே என்ற எங்கள் துர்க்கையின் பாடல் மேற்கு நாடுகள் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அமரர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
துர்க்கா துரந்தரி அவர்கள்

இவர் தனக்கேயுரிய வகையில் இசைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகின்றார். தெய்வீகப் பாடல்களை இயற்றிப் பாடி வரும் அன்னை தாஸனுடைய பாடல்கள் மனத்தை உருக்கவல்லவை. அவை இசையுடன் பாடுவதற்கேற்ற வகையில் அமைந்துள்ளன.

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள்

அன்னைதாஸன் சிறந்த பக்திமான், தமிழோடு இசைபாடி பக்தியை வளர்க்கும் பண்புள்ளம் கொண்டவர். பக்தி உணர்வினை பவித்திரமான இசையுடன் இணைத்து அவர் பஜனை செய்யும் பொழுது பல தடவைகள் அடியேன் பார்த்திருக்கிறேன்.

கலாநிதி S.சிவலிங்கராஜா அவர்கள்

உலகமாதாவாகிய அன்னைஸ்ரீநாகபூசணியின் ஆழ்ந்த பக்திமான் பக்திக்கவிமணி ஸ்ரீ க.ஆனந்தராசா இவரது இறைபக்தி இசைவடிவாக உலகெல்லாம் சென்றடைவதாக ஸ்ரீ நாகேஸ்வர சமேத அன்னை ஸ்ரீ நாகராஜா இராஜேஸ்வரியை உளமமர்த்தி வேண்டுகிறேன்.

சாகித்ய இசைப்பேரரசு நா.வி.மு.நவரத்தினம்

மலர்ந்த முகம், இனிய பேச்சு, திறந்த மனம் தூய உள்ளம் மனித நேயம் எளிய வாழ்வு, ஆன்மீக பலம் தனித்துவமான கவி, இசை ஆற்றல் இத்தனையும் ஒரு சேரப்பெற்றவர். அதிபா் ஆனந்தராசா பக்தி ரசம் சொட்டப்பாடி மக்களை மெய்மறக்கச் செய்பவர். இவர் உண்மையில் அன்னை தாஸனே.

சாமசூரி, சிந்தனைச் செல்வர் சிவ ஆறுமுகசாமி J.P

சிறீ லக்ஷ்மி பிறின்டேர்ஸ் பலாலிறோட், ஊரெழு T.P 0777 242168